ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1841/23 - 2013 දෙසැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2013.12.20

*1841/23 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டம்***

*52 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 52 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டும், மின்சக்தி மற்றும் மின்வலு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் விதப்புரையின் பேரிலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான்,*

*(அ) இக்கட்டளைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள காணி, மின்சக்தி கடத்தற் கருத்திட்டமொன்றை நிர்மாணிப்பதற்கும் அவசரமாக தேவைப்படுகின்றதென்றும் ; அத்துடன்*

*(ஆ) பொதுமக்களின் பொது சேமநலத்துக்கும் நன்மைக்கும் சேவையாற்றுவதாகவிருக்கும் பொது நோக்கமொன்றாகவுள்ள மேற்சொன்ன மின்சக்தி கடத்தற் கருத்திட்டத்தை நிர்மாணிப்பதற்காகத் தேவைப்படுகின்றதென்றும்,*

*அபிப்பிராயப்படுவதால், மேற்சொன்ன காணி சொல்லப்பட்ட நோக்கத்திற்குத் தேவைப்படுகின்றதென இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2013, திசெம்பர் 18.*

**அட்டவணை**

காணியின் எல்லைகள்

*இலங்கையின் மத்திய மாகாணத்தில், நுவரெலிய நிர்வாக மாவட்டத்தின் அம்பகமுவ கோரளை பிரதேச செயலகப் பிரிவின் மில்லகஹமுல (316ஈ பிரிவு) கிராம உத்தியோகத்தர் அலுவலகப் பிரிவில் உள்ள, பிடவல கிராமத்தில் அமைந்துள்ள உறுதி செய்யப்பட்ட நிலஅளவையாளரான நிமல் லியனகே அவர்களால் அளவிடப்பட்ட 2013.09.10 ஆந் திகதிய 1066 ஆம் இலக்க, 15 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட வரைபடத்தில் உள்ள காணிக்கான எல்லைகள் கீழ்வருமாறு :-*

*வடக்கு : தெல்பத் ஓயா மற்றும் குறித்த காணியின் மீதிப் பகுதி;*
*கிழக்கு : இக்காணியின் மீதித்துண்டு ;*
*தெற்கு : பாதை மற்றும் உத்தியோகபூர்வ வீட்டுக் காணி;*
*மேற்கு : பாதை மற்றும் உத்தியோகபூர்வ வீட்டுக் காணி.*

*பரப்பு : 15 ஏக்கர்.*

*உரிமைகோருபவர் : தோமஸ் ஜயசிங்க மற்றும் ஏனையோர்.*

*1 - 228*